www.Padasalai.Net www.TrbTnpsc.com

9 R Register No.

# காலாண்டுத் தேர்வு – 2024

நேரம் : 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 100

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும் 15x1=15

1. தமிழ்விடு தூது ......... என்னும் பாவகையால் ஆனது. :
அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலி வெண்பா ஈ) வஞ்சிப்பா
2. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி – அடிக்கோடிட்ட சொற்களுக்கு உரிய இலக்கணக் குறிப்பு
அ) வேற்றுமைத் தொகை ஆ) பண்புத்தொகை இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஈ) வினைத் தொகை
3. உலகச் சுற்றுச் சூழல் தினம் ............. : அ) ஜூன் 5 ஆ) ஜூலை 5 இ) ஆகஸ்ட் 5 ஈ) மே 5
4. மிசை என்பதன் எதிர்ச்சொல் என்ன? : அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை
5. சொற்றொடர்களை முறைப்படுத்துக
அ) ஏறுதழுவுதல் என்பதை ஆ) தமிழ் அகராதி இ) தழுவிப் படித்தல் என்கிறது
i) ஆ-அ-இ ii) ஆ-இ-அ iii) இ-ஆ-அ iv) இ-அ-ஆ
6. தமிழர்களின் தொன்மையான வீர விளையாட்டு : அ) ஏறு தழுவுதல் ஆ) கோழிச் சண்டை இ) கால்பந்து ஈ) மற்போர்
7. தீரா இடும்பை தருவது எது? :
அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம் இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை
8. கடல் பயணத்திற்காக உருவாக்கப்பட்ட செயலி : அ) சிதாரா ஆ) சித்தாரா இ) நேவிக் ஈ) அக்னி
9. பகுபத உறுப்புகள் ............... வகைப்படும் : அ) 6 ஆ) 4 இ) 5 ஈ) 7
10. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது? : அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி
11. பண்டைத் தமிழர்களின் பண்பாட்டுக் கருவூலம் என்று அழைக்கப்படும் நூல்
அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) திருக்குறள் ஈ) நற்றிணை

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக
தோரண வீதியும் தோம் அறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் யாது? : அ) திருக்குறள் ஆ) மணிமேகலை இ) சிலப்பதிகாரம் ஈ) தமிழ்விடு தூது
13. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) திருவள்ளுவர் ஆ) சீத்தலைச் சாத்தனார் இ) இளங்கோவடிகள் ஈ) ஆசிரியர் பெயர் அறியப்பட வில்லை
14. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைகளை எழுதுக.
அ) தோரண-பூரண ஆ) பாவை-காய்க் இ) தோரண-தோம் ஈ) தமிழ்விடு தூது
15. கமுகு என்று அழைக்கப்படும் மரம் : அ) தென்னை ஆ) மா இ) பாக்கு ஈ) வாழை

II. எவையேனும் நான்கு வினாவிற்கு விடையளிக்கவும். வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும் 4x2=8

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க அ) பெரிய புராணத்தின் ஆசிரியர் சேக்கிழார் ஆவார்
ஆ) நம் முன்னோர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர்
17. 'கண்ணி' என்பதன் விளக்கம் யாது-
18. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் கூறுக.
19. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.
20. கூவல் என்று அழைக்கப்படுவது யாது?
21. எனைத்தானும் எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும் 5x2=10

22. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.
23. பகுபத உறுப்பிலக்கணம் தருக; கொள்வார்
24. பொருத்தமான பெயரடைகளை எழுதுக.
1. அவன் ............... நண்பனாக இருக்கிறான், 2. ............... விலங்கிடம் பழகாதே (இனிய, கொடிய, நல்ல)
25. கலைச் சொற்கள் தருக. : அ) Water management ஆ) Download
26. மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. : அ) கண்ணும் கருத்தும் ஆ) நகமும் சதையும்
27. ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களில் நிரப்புக. :
அ) எண்ணெய் ஊற்றி ........... விளக்கு ஏற்றியவுடன், இடத்தை விட்டு .........
ஆ) எழுத்தாணி கொண்டு ....... தமிழை, ஏவுகணையில் ....... எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள் (எழுதி, அகல்)
28. விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**IV. எவையேனும் இரண்டு வினாவிற்கு விடையளிக்கவும்** 2x3=6

29. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

30. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணைய வழிச் சேவைகளை எழுதுக.

31. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
ஏறு தழுவுதல் முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும் மருத நிலத்து வேளாண் குடிகளின் தொழில் உற்பத்தியோடும் பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்தது.
அ) இப்பத்தியில் குறிப்பிடப்படும் நிலங்கள் யாவை?
ஆ) வேளாண் தொழில் நடைபெறும் நிலம் யாது? இ) முல்லை நிலத்து மக்களின் அடையாளம் யாது?

**V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்கவும்**

32. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

33. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

34. நீரின்றி அமையா எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் (அல்லது)
குறம் என்றும் பள்ளு என்றும் எனத் தொடங்கும் தமிழ் விடுதூது பாடலின் கடைசி நான்கு அடிகளை எழுது.

**VI. எவையேனும் இரண்டு வினாவிற்கு விடையளிக்கவும்** 2x3=6

35. தன்வினை, பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.

37. தொடர்களை அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு மாற்றியமைக்க.
அ) இசையின்றி அமையாது பாடல் (உடன்பாட்டுத் தொடராக)
ஆ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா ? (கட்டளைத் தொடராக)
இ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார் (பிறவினைத் தொடராக)


**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** 5x5=25

38. தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.
(அல்லது)
பெரியபுராணம் காட்டும் குரு நாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

39. உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் கால் முளைத்த கதைகள் என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக. (அல்லது)
சுற்றுச் சூழலைப் பேணிக் காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்று எழுதுக.

40. நயம் பாராட்டுக விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில் பொழிகின்ற
புனலருவிப் பொழிலில், காட்டில் புல்வெளியில், நல்வயலில்,
விலங்கில், புள்ளில் தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து
நெஞ்சில் தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள் அகத்திலும்
நீ குடியிருக்க வேண்டுவேனே!

41. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



42. மொழிபெயர்க்க :
Hitting the bottles with the spoon makes them vibrate and produce a sound. The more the bottle vibrates, the higher the note will be. The more water in a bottle, the less it vibrates, so less water means higher notes. (அல்லது)
உங்கள் பெற்றோர் மகிழுமாறு நீங்கள் செய்ய வேண்டியது யாது?

**VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** 3x10=30

43. அ) நீரின்றி அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
(அல்லது)
ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விளக்குக.

44. அ) தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி வரைக. (அல்லது)
ஆ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

45. அ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை வரைக.
முன்னுரை - நீரின் அவசியம் - மழைநீர் சேகரிப்பு - மழை நீர் சேகரிக்கும் வழிகள் - பயன்கள் - முடிவுரை
(அல்லது)
உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பாக நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழிநாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com